மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.04/2023
அ.வ.எண்.169/2022

கந்தசாமி ...மனுதாரர்/வாதி

/எதிராக/

பாலகிருஷ்ணன் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 22.09.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மோகன்ராம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மோகன்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அசல் பாகபிரிவினை பத்திரத்தை திரும்ப அளிக்க உத்தரவிட கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுவின் சுருக்கம் : –

எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது விளம்புகை, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்/வாதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, வழக்கு எழுவினாக்களுக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு 90 வயதாகிவிட்ட காரணத்தால் தாவா சொத்தை பொறுத்து தனது மகன்களுக்கு செட்டில்மெண்ட் எழுதுவதற்காக தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பாகபிரிவினை பத்திரம் தேவைப்படுவதால் மேற்படி பாகபிரிவினை பத்திரத்தின் பதிவுநகலை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாகவும், நீதிமன்றம் விசாரணைக்கு கோரும்போது மேற்படி ஆவணத்தை முன்னிலைப்படுத்துவதாக உத்தரவாதம் அளிப்பதாகவும் கூறி மேற்படி

நிபந்தனைகளின் பேரில் பாகபிரிவினை பத்திரத்தை மனுதாரர் வசம் திருப்பி அளிக்க உத்தரவிட கோரி மனுதாரர்/வாதி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிர்மனுதாரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

மனு பொய்யானது, மோசடியானது ஆகும். மனுதாரருக்கு 90 வயதாகிவிட்ட காரணத்தால் தாவா சொத்தை பொறுத்து தனது மகன்களுக்கு செட்டில்மெண்ட் எழுதுவதற்காக தான் தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பாகபிரிவினை பத்திரத்தை திரும்ப பெற மனுதாக்கல் செய்துள்ளார் என்பது பொய்யான சங்கதிகளாகும். மனுதாரர் மேற்படி தாவாவை விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள நிலையில் தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதிக்கு எதிராக வில்லங்கம் ஏற்படுத்துவதற்காக தான் மனுதாரர் மேற்படி தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பாகபிரிவினை பத்திரத்தை திரும்ப பெற இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது தான் உண்மையாகும். எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு:-

(i) மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு வயதாகிவிட்டதால் தாவா 1வது அயிட்ட சொத்து தொடர்பாக தனது வாரிசுகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க வேண்டும் என்பதால் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பாகபிரிவினை ஆவணத்தை நீதிமன்றம் கோரும் சமயத்தில் முன்னிலைப்படுத்துவதாகவும், அதற்கு மாற்றீட்டாக மேற்படி ஆவணத்தின் பதிவு நகலை தாக்கல் செய்வதாகவும் கூறி மனுதாரர் மேற்படி பாகபிரிவினை ஆவணத்தை திருப்பி அளிக்குமாறு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் மேற்படி தாவாவை விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள நிலையில் தாவா சொத்தை பொறுத்து எதிர்மனுதாரருக்கு எதிராக வில்லங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தில் தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பாகபிரிவினை பத்திரத்தை திரும்ப கோருவதாகவும், இம்மனு பல்வேறு வழக்கு நடவடிக்கைகளை ஏற்படுத்தும் என்பதால் மேற்படி மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் எதிர்வாதம் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களும் கவனமாக கருத்தில் கொள்ளப்பட்டன. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாதுரைகளை கவனமாக பரிசீலனை செய்கையில், மனுதாரர் தரப்பில் தாவா 2 வது அயிட்ட சொத்தில் தனக்கு இன்றியமையா வசதியுரிமை உள்ளது என விளம்புகை பரிகாரம் கோரியும், தாவா 2 வது அயிட்ட சொத்தில் உள்ள தடவழியின் அமைப்பை மாற்றக்கூடாது எனவும், மனுதாரரின் அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது எனவும், வில்லங்கப்படுத்தக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(iv) மனுதாரரின் வழக்குரைப்படி தோரமங்கலம் கிராம ச.எண்.117/2F ல் உள்ள தாவா 1 வது அயிட்ட சொத்தானது கடந்த 10.03.1999 ம் தேதியிட்ட பாகபிரிவினை ஆவண எண்.P25/1999 (41/2001)ன்படி மனுதாரருக்கும், ச.எண்.117/2C ல் உள்ள தாவா 2 வது அயிட்ட சொத்து கண்ணம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டும், மேற்படி கண்ணம்மாள் இறப்பிற்கு பின்னிட்டு அவரது மகன்களால் எதிர்மனுதாரரின் பெயருக்கு பொது அதிகார பத்திரம் அளிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி ச.எண்.117/2C ல் கிழமேலாக 15 அடி அகலத்தில் செல்லும் பொது பாதையை மனுதாரர் தனக்கு சொந்தமான தாவா 1 வது அயிட்ட சொத்திற்கு செல்வதற்கு வழித்தடமாக பயன்படுத்தி வருவதாகவும், மேற்படி வழித்தடத்தை பொறுத்து மனுதாரருக்கு இன்றியமையா வசதியுரிமை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(v) இந்நிலையில் மேற்படி வசதியுரிமைக்காக விளம்புகை பரிகாரம் கோரி மனுதாரரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கு எழுவினாக்கள் வனைவதற்காக

நிலுவையில் உள்ள நிலையில், மனுதாரர் தனக்கு வயதாகிவிட்ட காரணத்தால் தாவா சொத்தை பொறுத்து தனது மகன்களுக்கு செட்டில்மெண்ட் எழுதுவதற்காக தாவாவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பாகபிரிவினை பத்திரம் தேவைப்படுவதாகவும், மேற்படி பாகபிரிவினை பத்திரத்தின் பதிவுநகலை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாகவும், நீதிமன்றம் விசாரணைக்கு கோரும்போது மேற்படி ஆவணத்தை முன்னிலைப்படுத்துவதாக உத்தரவாதம் அளிப்பதாகவும் கூறி, மேற்படி அசல் பாகபிரிவினை பத்திரத்தை தனக்கு திருப்பி தர வேண்டும் என கோரியுள்ளது தெரியவருகிறது.

(vi) இவ்வழக்கில் மனுதாரர் தாவா 2 வது அயிட்ட சொத்து தன்னுடையது எனவோ, மேற்படி சொத்தில் தனக்கு உரிமையுள்ளது எனவோ விளம்புகை பரிகாரம் கோரவில்லை. மாறாக தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து தனக்கு வசதியுரிமை உள்ளது என மட்டுமே விளம்புகை பரிகாரம் கோரியுள்ளார். மேலும் தற்போது தனக்கு பாகபிரிவினைப்படி பாத்தியப்பட்ட தாவா 1 வது அயிட்ட சொத்தை பொறுத்து மட்டுமே தன் மகன்களுக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் அளிப்பதற்காக வேண்டி மேற்படி பாகபிரிவினை ஆவணத்தின் அசல் ஆவணம் தேவைப்படுவதாக கோரியுள்ளார். மேற்கண்ட சங்கதிகளை கருத்தில் கொள்கையிலும், தாவா 1 வது அயிட்ட சொத்தில் மனுதாரருக்குள்ள உரிமை குறித்து எதிர்மனுதாரர் தனது பதிலுரையில் குறிப்பாக மறுக்காத நிலையிலும், மேற்படி தாவா 1 வது அயிட்ட சொத்து குறித்து மனுதாரர் குடும்ப ஏற்பாடுகள் செய்வதில் எவ்வித தடையும் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் மற்றொரு சங்கதி யாதெனில், மனுதாரரின் வழக்கை நிரூபிக்க வேண்டிய நிரூபண சுமையானது மனுதாரரையே சார்ந்தது என்பதாலும், மனுதாரர் மேற்படி பாகபிரிவினை ஆவணத்தின் பதிவுநகலை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாகவும், மேற்படி அசல் பாகபிரிவினை ஆவணத்தை நீதிமன்றம் கோரும் சமயத்தில் வழக்கு விசாரணையில் தாக்கல் செய்வதாக உத்தரவாதம் அளிப்பதாலும், மேற்படி அசல் பாகபிரிவினை ஆவணத்தை நிபந்தனைக்குட்பட்டு மனுதாரரிடம் ஒப்படைப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதகமான சூழலும் ஏற்பட வாய்ப்பில்லை என இந்நீதிமன்றம் கருதி, பாகபிரிவினை

ஆவணத்தின் பதிவு நகலை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதன் பேரிலும், நீதிமன்றம் கோரும் போது அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாக உறுதிமொழி பத்திரம் தாக்கல் செய்துள்ள நிலையிலும், மனுதாரர் கோரும் பாகபிரிவினை பத்திரத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டும், பாகபிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் மற்றும் உறுதிமொழி பத்திரம் தாக்கல் செய்ய மனுதாரருக்கு உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.09.27 17:25:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.09.27 17:26:06 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.